மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் வைகாசி மாதம் 20-ம் நாள்
2023-ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் நாள் சனிக் கிழமை

**IA 2/2022 /in/ 457/2019/in/ OS 113/2019**
( Original Suit CNR No. TNTH06-000-195-2019)

1. M.R.K. சகாயஷீலா
2. M.R.K. சேவியர் :: 1, 2 மனுதார்கள் / 1, 2 எதிர்மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள்

**/எதிர்/**

V. குழந்தை அந்தோணிசாமி :: எதிர்மனுதார் / வாதி

--------

இம்மனுவானது 24-04-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.V. சுப்பிரமணியன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகதினகரன், M.B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் IA 457/2019 மனுவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கையை நீக்கறவு செய்துவிட்டு, மீண்டும் மனுச் சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளந்து அவற்றின் தன்மைகள், இயற்கை அமைப்புகள் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட ஆணையரையே மீண்டும் நியமனம்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:05 +0530

செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 26 விதி 9—ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்:**

மனுதார் அசல் வழக்கில் 2—ம் பிரதிவாதியாவார். 1—ம் பிரதிவாதி மனுதாரரின் உடன்பிறந்த சகோதரி ஆவார். மனுவில் துலக்கப்பட்டுள்ள 1, 2 இலக்கச் சொத்துக்களானது 1, 2 பிரதிவாதிகளுக்கு 27—05—2002—ம் தேதிய பாக விஸ்தியில் B மற்றும் H ஷெட்யூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும். 3—வது இலக்கச் சொத்தானது வாதியின் முன் கிரையதாரரான 2—ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரர் M.R.K.ஜஸ்டின் பிரபாகரன் அவர்களுக்கு 27—05—2002—ம் தேதிய பாக விஸ்தியின் அடிப்படையில் E ஷெட்யூலில் 2—ம் இலக்கச் சொத்தாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும். வாதி , பிரதிவாதிகளுக்கு எதிராக செயல் உறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் IA 457/2019 என்ற கமிஷன் மனுவை வாதி தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆணையர் மனுவில் பிரதிவாதிகளின் சொத்துக்களையும், அருகிலுள்ள சுவான்தாரர்களின் சொத்துக்களையும் சேர்த்து அளவீடு செய்ய வேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்திருந்துள்ளனர். ஆனால் நீதிமன்ற ஆணையர் வாதிக்குப் பாத்தியமான சொத்துக்களை மட்டும் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, மேற்படி அறிக்கைக்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராது வரைபடத்தில் துலக்கப்பட்டுள்ள EFGH மற்றும் IJDE பகுதியான 1—ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இடத்தினையும், 2—ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தினையும் அளந்தால் மட்டுமே 1—ம் பிரதிவாதி மேற்படியாரது இடத்தில் முள்வேலி அமைத்துள்ளாரா ? அல்லது வாதி கூறுவது போல் பிராது வரைபடத்தில் IJ என்று காட்டப்பட்டுள்ள பகுதியில் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளதா ? என்பது தெரியவரும். பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தென்வடல் பாதையின் நீளத்தையும், மேற்படி பாதையானது முடிவடையும் இடம் வரை அளந்தால் மட்டுமே உண்மை தெரியவரும். எனவே IA 457/2019 மனுவல் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையைர் அறிக்கையை நீக்கறவு செய்து செய்துவிட்டு, இத்துடன் தாக்கல் செய்துள்ள re—issue

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:15 +0530

commission மனுவை கோப்புக்கு எடுக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதார் / வாதி தரப்பு எதிர்உரை சுருக்கம்.</u>

மனுச் சங்கதிகள் மறுக்கப்படுகிறது. IA 457/2019 கமிஷன் மனு கடந்த 25-11-2019-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதார்கள் / பிரதிவாதிகள் கூறுவது போன்று மேற்படி ஆணையர் அறிக்கையில் ஏதேனும் குறையிருந்திருந்தால் பிரதிவாதிகள் மேல் முறையீடு செய்திருக்கலாம். அவ்வாறு எவ்வித மேல்முறையீடும் செய்யாமலும், மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு மூன்று வருடங்கள் வரை எவ்வித ஆட்சேபனையும் செய்யாமலும் இருந்துவிட்டு தற்போது பிரதிவாதிகள் சொத்தையும், அருகிலுள்ள சுவான்தார்களின் சொத்துக்களையும் அளந்தால்தான் உண்மை தெரியவரும் என்று கூறி இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. மூலவழக்கின் நடவடிக்கைகளை காலதாமதப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் கோரியுள்ளவாறு மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6) **<u>பிரச்னைக்கான தீர்வு:</u>**

இரு தரப்பு வாதம் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கின் பிரதிவாதிகள், மனுதாரர்களாக இருந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். ஏற்கனவே அசல் வழக்கின் வாதியான இம்மனுவின் எதிர்மனுதார் , மனுதாரராக இருந்து IA 457/2019 என்ற மனுவை தாக்கல் செய்து , மேற்படி மனுவிற்கு இந்த மனுதாரர்களால் எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டு இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு , பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மனுச் சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை தாக்கல்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:28 +0530

செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கைக்கு இந்த மனுதார்களால் ஆட்சேபனையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7)** மனுதார்கள் / 1, 2 பிரதிவாதிகள் இந்த மனு அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்களின் படி ஏற்கனவே IA 457/2019 மனுவில் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் கூறியுள்ள அதே சங்கதிகளை இம்மனுவில் மீண்டும் கூறி ஆணையரை மீண்டும் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்து உத்தரவிட வேண்டும் என்று கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**8)** அசல் வழக்கானது எதிர்மனுதார் / வாதியால் செயல்வலியுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்கள் சொத்திற்கும், எதிர்மனுதார் சொத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பாதையினை பிரதிவாதிகளான இம்மனுவின் மனுதார்கள் வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்து அசல் வழக்குரைச் சொத்தை எதிர்மனுதார் / வாதி அமைதியாக அனுபவம் செய்வதை இந்த மனுதார்கள் / பிரதிவாதிகள் இடையூறு செய்வதாக கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9)** மனுதார்கள் / பிரதிவாதிகளால் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் கம்பி வேலி , மனுதார்கள் மற்றும் எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட பொதுவான பாதையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள நிலையில், இந்த மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி கம்பி வேலி பிராது வரைபடத்தில் கூறப்பட்டுள்ள I J என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதா ? என்பது பற்றி வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்துக்களையும் அருகில் உள்ள பிற நில சுவான்தார்களின் சொத்துக்களையும் மேற்படி பாதையின் மொத்த நீளத்தையும் அளவீடு செய்தால் மட்டுமே உண்மை நிலவரம் தெரியவரும் என்று கூறி அதன் காரணமாக மீண்டும் தாவா சொத்தை பார்வையிட உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:40 +0530

**10)** மனுதார்கள் , இம்மனு அபிடவிட்டில் கூறியுள்ள இதே காரணங்களை ஏற்கனவே கமிஷன் நியமனம் கோரிய மனுவான IA 457/2019 மனுவிற்கான எதிர்உரையில் கூறியுள்ள நிலையில் மேற்படி எதிர்உரையை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் மனுச் சொத்தை மட்டும் அளவீடு செய்து உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், மேற்படி உத்தரவிற்கு எதிராக இந்த மனுதார்கள் / பிரதிவாதிகள் எவ்வித மேல்முறையீடும் செய்து கொள்ளாமலும் , ஆணையர் மனுச் சொத்தை பார்வையிடும் சமயத்தில் எந்த ஒரு ஆட்சேபனையும் ஆணையரிடம் தெரிவிக்காமலும், ஆணையர் அறிக்கைக்கு பின்னரும் இந்த மனுதார்கள் / பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் மனுச் சொத்து உட்பட வாதி, பிரதிவாதிகளின் பிற சொத்துக்கள் மற்றும் அருகில் உள்ள மற்ற நில சுவான்தார்களின் சொத்துக்களையும் அளவீடு செய்ய வேண்டியது அவசியம் என்று குறிப்பான ஆட்சேபனை எதையும் தெரிவித்துக் கொள்ளாமலும், சுமார் 3 வருடங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளது , வழக்கினை மேலும் கால தாமதப்படுத்தும் நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதார் / வாதி தரப்பில் கூறப்படும் வாதம் கருத்தில் கொள்ளத்தக்கதாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** தரப்பினர்கள் தங்கள் வழக்கை தகுந்த சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபித்துக்கொள்ள போதிய வாய்ப்புள்ள நிலையில், ஸ்தலத்தில் உள்ள இயற்கை அமைப்புகள் குறித்து விரிவான அறிக்கை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வேண்டும் என்று கூறி மனுதார்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** மேலும் மனுதாரரின் மனு மற்றும் அபிடவிட்டில் ஆணையர் மனுச் சொத்தை பார்வையிட்ட சமயத்தில் சட்ட முரணாகவோ அல்லது ஒரு தலை பட்சமாகவோ நடந்து கொண்டதாக எந்த ஒரு குறிப்பான குற்றச்சாட்டும் ஆணையருக்கு எதிராக கூறப்படாத நிலையில், தரப்பினர்கள் தங்கள் வசதிக்கேற்ப அறிக்கை பெறும் பொருட்டு மீண்டும் ஆணையர் நியமனம்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:49 +0530

கோரும் மனுவை தாக்கல் செய்து நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் விதமாக செயல்படுவது ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் மனு அனுமதிக்கத்தக்கதாக இல்லை என்று முடிவு செய்து மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**13)** இறுதியாக,

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 2/2022 தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

இந்த உத்தரவானது முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் வரி வடிவில் எடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்து விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 03-06-2023-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:35:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

I.A. 2/2022
in
IA 457/2019/in/
O.S. 113/2019
FAIR / DRAFT ORDER
Date : 03-06-2023

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.

**முன்னிலை: திரு. A. சரவண செந்தில் குமார், B.Com., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீசோபகிருது வருடம் வைகாசி மாதம் 20-ம் நாள்
2023-ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் நாள் சனிக் கிழமை

**IA 2/2022 /in/ 457/2019/in/ OS 113/2019**
**(Original Suit CNR No. TNTH06-000-195-2019)**

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமத்தில் வார்டு எண்.2, M.R.K. இல்லம் என்ற முகவரியில் குடியிருந்து வரும் லேட். M.R. ஆரோக்கியசாமி உடையார் என்ற குழந்தைசாமி உடையார் அவர்களின் மகள், கிறிஸ்துவர், சுகவாசம் சுமார் 48 வயதுள்ள சகாயஷீலா. |
| 2 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமத்தில் வார்டு எண்.2, M.R.K. இல்லம் என்ற முகவரியில் குடியிருந்து வரும் லேட். M.R. ஆரோக்கியசாமி உடையார் என்ற குழந்தைசாமி உடையார் அவர்களின் மகன், கிறிஸ்துவர், விவசாயம் சுமார் 76 வயதுள்ள M.R.K. சேவியர். |

..... மனுதாரர்கள் / 1, 2 எதிர்மனுதார்கள் /1, 2 பிரதிவாதிகள்

| | |
|---|---|
| 1. | தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமம், வார்டு-2, கதவு எண்.309(2) தோமையர் தெரு என்ற முகவரியில் வசிக்கும் வின்சென்ட் அவர்களின் மகன் , கிறிஸ்தவர், விவசாயம் சுமார் 69 வயதுள்ள குழந்தை அந்தோணி. |

... எதிர்மனுதாரர் /வாதி

அசல் வழக்கில் IA 457/2019 மனுவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையர் அறிக்கையை நீக்கறவு செய்துவிட்டு, மீண்டும் மனுச் சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளந்து அவற்றின் தன்மைகள், இயற்கை அமைப்புகள் குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஏதுவாக ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட ஆணையரையே மீண்டும் நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 26 விதி 9-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | 29-11-2022 |
| நீதிமன்ற கட்டணம் | ரூ.20/- செலுத்தப்பட்டது. |

இம்மனுவானது 24-04-2023-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.V. சுப்பிரமணியன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:36:10 +0530

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகதினகரன், M.B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**நிறைவேற்றாணை**

| | |
|---|---|
| 1. | இடைநிலை மனு எண். 2/2022 தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

**சொத்து விபரம்**

1) பெரியகுளம் ரிடி, உத்தமபாளையம் சப்டி, இராயப்பன்பட்டி கிராமம், 2-வது வார்டில் உள்ள காலியிடத்துக்கு மால்.

வடக்கு- K. ராஜரத்தினம் பாக இடம்
கிழக்கு- வ.சு. செபஸ்தியார உடையார் பாக இடம்
தெற்கு- M.R.S. ஆரோக்கிய உடையார் இடம்
மேற்கு- 15 அடி பொதுப்பாதை

இம்மாலில் கிழமேலடி வடபக்கம் அடி 86 கிழமேல் தென்பக்கம் அடி 101.1/2 தென்வடல் இருபக்கமும் சராசரி அடி 57 உள்ள இடம் மொத்த சதுரடி 5343.3/4 சதுரடி உள்ள இடமும் இதற்கு மேற்குப் பக்கம் உள்ள பொதுப்பாதையில் நடந்து கொள்ளும் நடைபாதை பாத்தியமும் சேர்த்து (1-ம் மனுதாரர் / 1-ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது )

2) பெரியகுளம் ரிடி, உத்தமபாளையம் சப்டி, இராயப்பன்பட்டி கிராமம், வார்டு-2-ல் உள்ள காலியிடம் கிழமேல் தென்புறம் அடி 24 வடபுறம் அடி 23-ம் தென்வடல் சராசரி அடி 136 உள்ள இடம் மொத்த சதுரடி 3196 உள்ள காலியிடத்துக்கு மால்.

வடக்கு- வீதி
கிழக்கு- இப்பாக 2-வது இலக்க இடமும், சந்தியா உடையார் மனையும்
தெற்கு- M.R.S. ஆரோக்கிய உடையார் வகையறா மனை
மேற்கு- ராஜரத்தின பாக மனை

இம்மாலில் மேல்கண்ட 3196 சதுரடி உள்ள இடம். இதன் நத்தம் சர்வே /1B, 418/4 நிரில் கட்டுப்பட்டது (2-ம் மனுதாரர் / 2-ம் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்டது)

3) பெரியகுளம் ரிடி, உத்தமபாளையம் சப்டி, இராயப்பன்பட்டி கிராமம், 2-வது வார்டில் உள்ள காலி மனையிடத்திற்கு நான்கு மால் விபரம்.

வடக்கு- K. ஜஸ்டின் பிரபாகரன் இடம்
கிழக்கு- 15 அடி அகல பொதுப்பாதை

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:36:21 +0530

தெற்கு- ஆரோக்கிய உடையார் வகையறா இடமும், 8 அடி அகல பாதையும்
மேற்கு- M.R.K. சேவியர் இடமும், ஆரோக்கிய உடையார் இடமும்.

இம்மாலில் கிழமேல் வடக்குப் பக்கம் அடி 93.1/2 தொண்ணூற்றி மூன்றரையும், கிழமேல் தெற்குப் பக்கம் அடி 89 எண்பத்தி ஒன்பதும், தென்வடல் கிழக்குப் பக்கம் அடி 58 ஐம்பத்தி எட்டும், தென்வடல் மேற்குப் பக்கம் அடி 58 ஐம்பத்தி எட்டும் ஆக 5292.1/2 சதுரடி உள்ள மனையிடமும், மேற்படி இடத்திற்கு கிழக்குப் பக்கம் உள்ள பொதுப்பாதையின் வழியாகவும், மேற்படி முந்தைய ஆவண விபரப்படி அமைந்துள்ள 8 எட்டு அடி அகல பாதையின் வழியாகவும் நடந்து புழங்கிக்கொள்ளும் நடைபாதை பாத்தியமும் மற்றும் மேற்படி சொத்திற்கு ஏற்பட்ட சகல மாமூல் பாத்தியங்களும் சேர்ந்து . இதன் நத்தம் சர்வே 5/1C நம்பரில் கட்டுப்பட்டது. மேற்படி சொத்து இராயப்பன்பட்டி கிராம எல்கைக்குட்பட்டது.

**<u>செலவுத் தொகை இல்லை</u>**

2023–ம் வருடம் ஜுன் மாதம் 03–ம் நாள் எனது கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2023.06.03 15:36:34 +0530

***மாவட்ட உரிமையியல் நீதிபதி,***
***உத்தமபாளையம்.***

I.A. 2/2022
in
IA 457/2019
in
O.S.
113/2019
EX ORDER
Date : 03-06-2023